டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in
கல்யாண் ஜுவல்லர்ஸ்
agridoctor.in | 1.08.2026 சனிக்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 038 - Madurai | Online Edition

# எத்தனால் கலந்த பெட்ரோல் திட்டம், உணவுப் பாதுகாப்பு, விவசாயிகளின் நலன், எரிசக்திப் பாதுகாப்பு ஆகியவற்றை சமநிலைப்படுத்துகிறது

புது தில்லி, ஜூலை 31

எத்தனால் கலந்த பெட்ரோல் திட்டம் என்பது இந்தியாவின் எரிசக்தி பாதுகாப்பை மேம்படுத்துவதற்கும், இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெய் மீதான சார்பைக் குறைப்பதற்கும், உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குமான முக்கிய திட்டமாகும். அதே வேளையில் விவசாயிகளின் வருவாயையும் இது அதிகரிக்கிறது. சமீபத்திய சில தகவல்கள் இத்திட்டத்தைப் பற்றி முழுமையற்ற, தவறான தகவல்களைப் பரப்பியுள்ளன. இது தொடர்பான சில விளக்கங்கள் உண்மையான நிலையை எடுத்துரைக்கின்றன.

குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொள்முதல் செய்யப்படும் ஒரு தானியம் கூட எத்தனால் உற்பத்திக்குத் திருப்பி விடப்படுவதில்லை. உணவு, பொது விநியோகத் துறையால் சான்றளிக்கப்பட்ட உபரி மட்டுமே எத்தனால் உற்பத்திக்கு அங்கீகரிக்கப்படுகிறது. உண்மையில் எத்தனால் திட்டத்தில் பயன்படுத்தப்படுபவை, சேதமடைந்த தானியங்கள், உடைந்த அரிசி, மனித நுகர்வுக்குத் தகுதியற்ற உணவு தானியங்கள் ஆகியவை மட்டுமே ஆகும். இது ஏழைகளிடமிருந்து உணவைப் பறிப்பது அல்ல; இது கழிவுகளைச் செல்வமாக மாற்றி, இறக்குமதியைக் குறைத்து, இந்திய விவசாயிகளின் கைகளில் அதிகப் பணத்தைக் கொடுக்கிறது.

இந்திய கச்சா எண்ணெய் விலை ஒரு பேரலுக்கு 135 அமெரிக்க டாலராக உயர்ந்தபோது, தில்லியில் எத்தனால் கலக்கப்படாத பெட்ரோலின் விலை ஒரு லிட்டருக்கு சுமார் ரூ.125 ஆக இருக்கும் என்று கணிக்கப்பட்டது. ஆனால், நுகர்வோர் ஒரு லிட்டருக்கு ரூ.94.77 மட்டுமே செலுத்தினர். ஏனெனில், ஒவ்வொரு லிட்டரிலும் 20% உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட எத்தனால் ஆகும். இது, உலகளாவிய கச்சா எண்ணெய் விலை உயர்வின் தாக்கத்திலிருந்து பாதுகாக்க பயன்பட்டுள்ளது.

எத்தனால் கலந்த பெட்ரோல் திட்டத்தால் ரூ.1.97 லட்சம் கோடிக்கும் அதிகமான அந்நிய செலாவணி சேமிக்கப்பட்டுள்ளது. 316 லட்சத்திற்கும் மேற்பட்ட மெட்ரிக் டன் கச்சா எண்ணெய் இறக்குமதிக்கு மாற்றாக எத்தனால் பயன்படுத்தப்பட்டுள்ளது. 950 லட்சத்திற்கும் மேற்பட்ட மெட்ரிக் டன் கரியமில வாயு வெளியேற்றம் குறைக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு ரூ.1.66 லட்சம் கோடிக்கும் மேல் பணம் வழங்கப்பட்டு, விவசாய விளைபொருட்களுக்கு ஒரு நிலையான உள்நாட்டுச் சந்தை உருவாக்கப்பட்டது.

# நெல்லிக்கனி தொக்கு தயாரித்தல் பற்றிய செயல்விளக்கப் பயிற்சி



மதுரை, ஜுலை 31

மதுரை மாவட்டம், ஒத்தக்கடை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள வேளாண்மை அறிவியல் நிலையத்தில் 'நெல்லிக் கனி தொக்கு தயாரித்தல் செயல் விளக்கப் பயிற்சி' நடந்தது. இச்செயல் விளக்கப் பயிற்சியியை வேளாண்மை அறிவியல் நிலையத்தின் முதன்மை விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் கி.சுரேஷ் துவக்கிவைத்தார். முனைவர் கி.ஜோதிலெட்சுமி, உதவிப் பேராசிரியர் (மனையியல்) நெல்லிகனியின் தொக்கு மற்றும் காய்கறி தொக்கு காய்கறிகளில் அறுவடை பின்சார் தொழில்நுட்பங்கள், முக்கியத்துவம், சத்துக்கள், மருத்துவ பயன்கள் மற்றும் தொக்கு தயாரித்தல் பற்றிய பயிற்சி யினை செயல் விளக்கத்துடன் செய்து காட்டினார். இதில் 50க்கும் மற்ப்பட்ட விவசாய பெண்கள் மற்றும் தொழில் முனைவோர்கள் கலந்துக் கொண்டு பயன்பெற்றனர். முனைவர் செ.சரவணன் (கால்நடை மருத்துவர்) நகர்ப்புறங்களில் கோழி மற்றும் ஆடு வளர்ப்பு பற்றி விளக்கவுரை வழங்கினார். முனைவர் கு.செல்வ ராணி, வேளாண் விரிவாக்கம், மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களை சந்தைப்படுத்துதல் தொழில்நுட்பம் பற்றி வேளாண்மை அறிவியல் நிலையத்தில் பயிற்சி பெற்ற தொழில் முனைவோர்களுக்கு விளக்கினார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# காப்பீடு செய்து பயன் பெற தாரமங்கலம் வேளாண் உதவி இயக்குநர் அழைப்பு



சேலம், ஜுலை 31

சேலம் மாவட்டம், தாரமங்கலம் வட்டாரம், பாப்பம்பாடி அமரகுந்தி போன்ற அனைத்து கிராமங் களிலும் காரீப் பருவத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர் களுக்குப் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் விவசாயிகள் காப்பீடு செய்து பயன் பெறலாம் என தாரமங்கலம் வட்டார வேளாண் உதவி இயக்குநர் மு.கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

எல் நினோ பருவநிலை மாற்றத்தின் காரணமாக வரட்சியான சூழல் நிலவுவதால் பயிர் காப்பீடு செய்வது அவசியமாகிறது. அதன்படி, ஒரு ஏக்கர் நிலக்கடலைக்கு ரூ.447, ராகிக்கு ரூ.253, சோளத்துக்கு ரூ.204 என பிரீமியம் செலுத்த வேண்டும். இந்த காப்பீடு செய்ய நில அடங்கல், நில உரிமைப் பட்டா, அரசு அடையாள அட்டை (நகல்), வங்கிக் கணக்கு புத்தக நகல் ஆகியவற்றை வழங்க வேண்டும். தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் அல்லது இ-சேவை மையங்களில் விண்ணப்பிக்கலாம். நிலக்கடலை மற்றும் சோளத்துக்கு ஆகஸ்ட் 17, ராகிக்கு ஆகஸ்ட் 31 ஆகிய தேதிகளுக்குள் பிரீமியம் தொகையைச் செலுத்தி காப்பீடு செய்து கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ளார்.

தாரமங்கலத்தில் உள்ள 19 கிராமத்தைச் சார்ந்த விவசாயிகள் தாரமங்கலம் வேளாண்மை உதவி வேளாண்மை அலுவலர்கள் உதவி தோட்டக்கலை அலுவலர்கள் தொடர்பு கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது. வேளாண்மை உதவி இயக்குநர் மு கஜேந்திரனின் தலைமையில் பிரதம மந்திரி பயிர் காப்பீடு திட்டம் பற்றிய விவரம் குறித்து விவசாயிகளுக்கு கூறப்பட்டது. பிறகு சமச்சீர் உரபயன்பாடு பற்றிய தகவல் விழிப்புணர்வும் விவசாயிகளுக்கு கூறப்பட்டது.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# வகை வகையான சூப் தொடர்...

# சூப் செய்வது எப்படி?



### 4. பீட்ரூட் சூப்

**தேவையான பொருட்கள்**

பீட்ரூட் — 2

வெங்காயம் — 1

பூண்டு — 2 பல்

மிளகு தூள் — ½ டீஸ்பூன்

உப்பு — தேவையான அளவு


**செய்முறை**

பீட்ரூட்டை வேக வைத்து அரைக்கவும். வெங்காயம், பூண்டு வதக்கி அரைத்த கலவையை சேர்த்து கொதிக்கவிடவும்.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

நாளை தொடரும்...

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**



# கரும்பு அலுவலர்களுக்கு கரும்பில் நீடித்த நிலையான சாகுபடி தொழில்நுட்பங்கள் மற்றும் பூச்சி நோய் மேலாண்மை பற்றிய பயிற்சி



கடலூர், ஜூலை 31

கடலூர் மாவட்டம், விருத்தாசலம், வேளாண்மை அறிவியல் நிலையத்தில் 28.07.26, 29.07.26 ஆகிய இரண்டு நாட்கள் பயிற்சியாக கடலூர் மற்றும் அரியலூர் மாவட்ட கரும்பு அலுவலர்கள் மற்றும் உதவி அலுவலர்களுக்கு (160 நபர்கள்) கரும்பில் நீடித்த நிலையான சாகுபடி தொழில்நுட்பங்கள் மற்றும் பூச்சி நோய் மேலாண்மை பற்றிய பயிற்சி நடைபெற்றது. விருத்தாசலம், வேளாண்மை அறிவியல் நிலைய மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் க.நடராஜன், கரும்பில் நீடித்த நிலையான சாகுபடி தொழில்நுட்பங்கள் பற்றி தெளிவாக விளக்கினார்.

இப்பயிற்சியில் கரும்பில் நீடித்த நிலையான சாகுபடி தொழில்நுட்பங்களான அதிக இடைவெளி விடுதல் 5 அடி ஒ 2 அடி ஒருபரு நாற்றாங்கால் பராமரித்து 30-35 நாட்களில் நடும் தொழில்நுட்பங்களும், ஊடுபயிர் சாகுபடி பற்றியும், கரும்பில் பயன்படுத்தும் கருவிகள் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது. ஒருங்கிணைந்த உர மேலாண்மையாக மேலுரமாக (0,45,90 நாட்கள்) பிரித்து கொடுப்பது பற்றியும், மை மற்றும் இரகங் களை கண்டுபிடிக்கவும் இராமசந்திரன், பயிற்சி அளித்தார். த.வே.க.ப கரும்பு பூஸ்டர் பயன்படுத்தும் முறைகள் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது.

கரும்பு அலுவலர்களின் கேள்விகளுக்கும் முக்கிய நோயான போக்கோபோயிங் மற்றும் வேர் புழு மேலாண்மை மேலும் பிற பூச்சி நோய் மேலாண்மை பற்றியும் தெளிவாக கரும்பு ஆராய்ச்சி நிலைய பேராசிரியர்கள் முனைவர் துரைசாமி மற்றும் முனைவர் இரவிசந்திரன் விளக்கம் அளித்தனர். SNJ கரும்பு ஆலை, பொது மேலாளர் இப்பயிற்சிக்கு ஏற்பாடு செய்தார்.

**கடலூர் மாவட்டம்,** விருத்தாசலம், **வேளாண் அறிவியல் மையத்தில் ஆகஸ்ட் மாத பயிற்சிக்கான கால அட்டவணை** மற்றும் **பயிற்சியின் பெயர் மற்றும் நடைபெறுமிடம்** வழங்கப்பட்டுள்ளது.

| **வ. எண்.** | **நாள்** | **பயிற்சியின் தலைப்பு** |
|---|---|---|
| 1. | 06.08.26 | கம்பில் மேம்படுத்தப்பட்ட உழவியல் தொழில் நுட்பங்கள் **இடம் : குறிஞ்சிப்பாடி (மேற்கு)** |
| 2. | 10.08.26 | மக்காச்சோளத்தில் படைப்புழு மேலாண்மை **இடம் : சிறுபாக்கம்** |
| 3. | 11.08.26 | பலாவில் மதிப்பு கூட்டுதல் மற்றும் சந்தைப் படுத்துதல் பயிற்சி **இடம் : கீழ்மாம்பட்டு** |
| 4. | 12.08.26 | நெல்லில் ஒருங்கிணைந்த பண்ணையம் **இடம் : சக்திவிளாகம் (கீரப்பாளையம்)** |
| 5. | 13.08.26 | காளான் மதிப்பு கூட்டுதல் மற்றும் சந்தைப் படுத்துதல் **இடம் : கூனங்குறிச்சி** |
| 6. | 14.08.26 | மீன் வளர்ப்பு பயிற்சி **இடம் : அகரம்** |
| 7. | 15.08.26 | மக்காச்சோளத்தில் படைப்புழு மேலாண்மை **இடம் : வள்ளிமதுரம்** |
| 8. | 18.08.26 | கிராம பொருளாதார மேம்பாட்டிற்கான கால்நடை வளர்ப்பு **இடம் : கே.வி.கே, விருத்தாசலம்** |
| 9. | 18.08.26 | மரவள்ளியில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பயிற்சி **இடம் : பூலாம்பாடி** |
| 10. | 19.08.26 | நெல்லில் மேம்படுத்தப்பட்டவிதை உற்பத்தி தொழில்நுட்பங்கள் **இடம் : காவனூர்** |
| 11. | 19.08.26 | எல் நினோ விழிப்புணர்வு பயிற்சி **இடம் : வளையமாதேவி** |
| 12. | 21.08.26 | வேளாண் மகளிருக்கான அறுவடை பின்சார் தொழில்நுட்பங்கள் **இடம் : கே.வி.கே, விருத்தாசலம்** |
| 13. | 22.08.26 | நெல்லில் மேம்படுத்தப்பட்ட விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள் **இடம் : திருமலைஅகரம்** |
| 14. | 24.08.26 | காய்கறி பயிர்களில் ஒருங்கிணைந்த மேலாண்மை **இடம் : கன்டரகோட்டை** |

15. 25.08.26 வேளாண் மகளிருக்கான அறுவடை பின்சார் தொழில்நுட்பங்கள் **இடம் : கே.வி.கே, விருத்தாசலம்**

16. 25.08.26 காய்கறி சாகுபடியில் சொட்டுநீர் பாசனம் மூலம் உர மேலாண்மை **இடம் : கீழக்குறிச்சி**

17. 25.08.26 கடலூர் மாவட்டத்திற்கு ஏற்ற வெளியிடப்பட்ட பயிர் இரகங்கள் **இடம் : மேல்புவனகிரி**

18. 27.08.26 தீவன பயிர் சாகுபடி பயிற்சி **இடம் : தர்மநல்லூர்**

19. 28.08.26 உரங்களின் சமச்சீர் பயன்பாடு **இடம் : பரங்கிப்பேட்டை**



# பயிர் சுழற்சி குறித்து விவசாயிகளுக்கு வேளாண் கல்லூரி மாணவிகள் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்

தென்காசி, ஜுலை 31

தென்காசி மாவட்டம், வாசுதேவநல்லூர் வட்டாரத்திற்கு உட்பட்ட நாரணாபுரம் ஊராட்சி மன்ற அலுவலகத்தில், கலசலிங்கம் பல்கலைக்கழகத்தின் இறுதியாண்டு வேளாண்மை மாணவிகளான பத்மஸ்ரீ ஜோதி.ச, அபர்ணாதேவி.ரா, கமலேஸ்வரி.அ, பிரிய தர்ஷினி.பூ, யாழினி.த மற்றும் ஞானமதி.கு ஆகியோர்,, RAWE திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பயிர் சுழற்சி (Crop Rotation) குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தினர்.



நிகழ்ச்சியில் ஊராட்சி மன்றத் தலைவர் மாரியம்மாளை சந்தித்து மரியாதை செலுத்திய மாணவர்கள், அங்கு கூடியிருந்த விவசாயி களுக்கு பயிர் சுழற்சியின் அவசியம் மற்றும் அதன் நன்மைகள் குறித்து எடுத்துரைத்தனர். பயிர் சுழற்சியை முறையாகக் கடைப் பிடிப்பதன் மூலம் மண்ணின் வளத்தை நீண்ட காலத்திற்கு பாது காக்க முடியும் என்றும், தொடர்ந்து ஒரே பயிரை சாகுபடி செய்வதால் ஏற்படும் மண் ஊட்டச்சத்து இழப்பைத் தவிர்க்க முடியும் என்றும் மாணவர்கள் விளக்கினர். மேலும், மண்ணில் இயற்கையாக நைட்ரஜன் நிலை அதிகரித்து, வேதியியல் உரங்கள் மற்றும் இயற்கை உரங்களின் தேவையை கணிசமாகக் குறைக்க முடியும் என்பதையும் எடுத்துரைத்தனர். இதன் மூலம் சாகுபடி செலவு குறைவதோடு, சுற்றுச்சூழலுக்கு உகந்த நிலையான வேளாண்மையை உருவாக்க முடியும் என்றும் தெரிவித்தனர்.

பயிர் சுழற்சியைப் பின்பற்றுவதால் பயிர்களின் வளர்ச்சி சீராக அமையவும், விளைபொருட்களின் தரம் மேம்படவும், அதிக மகசூல் கிடைக்கவும் வாய்ப்புள்ளதாகவும் மாணவர்கள் கூறினர். மேலும், நீர் பயன்பாட்டை திறமையாக நிர்வகிக்க முடிவதால் தேவையற்ற நீர்

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

வீணாவதைத் தவிர்க்க முடியும் என்றும், நீர் பயன்பாட்டுதிறன் அதிகரிப்பதன் மூலம் வறட்சி காலங்களிலும் சாகுபடியை சிறப்பாக மேற்கொள்ள முடியும் என்றும் விளக்கமளித்தனர். தொடர்ச்சியாக ஒரே வகைப் பயிரை சாகுபடி செய்யும் போது பூச்சிகள், நோய்கள் மற்றும் களைகள் அதிகளவில் பெருகும் சூழல் உருவாகிறது. ஆனால், பயிர் சுழற்சி முறையைப் பின்பற்றுவதன் மூலம் அவற்றின் வாழ்க்கைச் சுழற்சி தடைபட்டு, தாக்குதல் இயற்கை யாகவே குறைகிறது. இதனால் பூச்சிக்கொல்லி மற்றும் களைக் கொல்லி மருந்துகளின் பயன்பாடு குறைவதோடு, சாகுபடிச் செலவும் குறைகிறது. மேலும், மண்ணில் உள்ள நன்மை பயக்கும் நுண்ணுயிரிகளின் செயல்பாடுகள் அதிகரித்து, மண்ணின் உயிரியல் தன்மையும் பாதுகாக்கப்படுகிறது என்றும் விவசாயி களுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, பயிர் சுழற்சியை வெற்றிகரமாக நடை முறைப்படுத்துவதற்கான முக்கிய விதிமுறைகள் குறித்து மாணவர்கள் விரிவாக விளக்கினர். பருப்பு வகைப் பயிர் களுக்குப்பின் தானியப் பயிர்களை சாகுபடி செய்தல், மண் வளத்தை அதிகரிக்கும் பயிர்களுக்குப் பின் அதிக ஊட்டச்சத்து தேவைப்படும் பயிர்களைப் பயிரிடுதல், அதிக இலை உதிர்க்கும் பயிர்களுக்குப்பின் குறைந்த ஊட்டச்சத்து தேவைப்படும் பயிர்களைத் தேர்வு செய்தல், பசுந்தாள் உரப்பயிருக்குப்பின் தானியப் பயிர்களைப் பயிரிடுதல், அதிக உரமிடும் பயிருக்குப் பின் குறைந்த உரம் போதுமான பயிர்களை சாகுபடி செய்தல் போன்ற விதிமுறைகள் எடுத்துக்காட்டுகளுடன் விளக்கப்பட்டன.

மேலும், நீண்டகாலப் பயிருக்குப்பின் குறுகிய காலப்பயிர்களை சாகுபடி செய்தல், தீவனப் பயிருக்குப் பின் வயல் அல்லது காய்கறிப் பயிர்களைப் பயிரிடுதல், ஆழ்வேர் மற்றும் மேல்மட்ட வேர் கொண்ட பயிர்களை மாற்றி அமைத்தல், ஈர நில மற்றும் உலர் நிலப் பயிர்களை மாறி சாகுபடி செய்தல், பூச்சி, நோய் மற்றும் களை தாக்குதலைக் குறைக்கும் வகையில் மாற்றுப் பயிர்களைத் தேர்வு செய்தல் போன்ற பயிர் சுழற்சி நடைமுறைகளும் விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டன. ஒவ்வொரு விதிமுறைக்கும் பொருத்தமான பயிர் எடுத்துக்காட்டுகள் வழங்கப்பட்டு, அவற்றை தங்கள் நிலங் களில் எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம் என்பதையும் மாணவர்கள் விளக்கினர். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விவசாயிகள் மாணவர் களின் விளக்கங்களை ஆர்வமுடன் கேட்டு, தங்களது சந்தேகங் களுக்கு தெளிவான விளக்கங்களை பெற்றனர். இவ்விழிப்புணர்வு நிகழ்ச்சி விவசாயிகளுக்கு பயிர் சுழற்சி முறைகளை நடை முறையில் பின்பற்றுவதற்கான பயனுள்ள வழிகாட்டுதலாக அமைந்தது.

# அட்மா திட்டத்தில் உழவர் திரள் பெருவிழா

சேலம், ஜூலை 31

சேலம் மாவட்டம், வாழப்பாடி வட்டாரம், சோமம்பட்டி கிராமத்தில் அட்மா திட்டத்தின் சார்பில் உழவர் திரள் பெருவிழா நிகழ்ச்சி 31.07.26 அன்று நடைபெற்றது.



இவ்விழாவில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சீனிவாசன் எல்நினோ மற்றும் வறட்சி காலத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும், மழைநீர் சேமிப்பின் அவசியம் மற்றும் மழைநீர் சேமிப்பு தொழில்நுட்ப முறைகளை எடுத்துரைத்தார்.

வாழப்பாடி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் கண்ணன், பயிர் காப்பீடு, விவசாய அடையாள எண் மற்றும் திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார்.

இவ்விழாவில் வேளாண் வணிகம், வேளாண் ஒழுங்குமுறை விற்பனை கூடம், கால்நடை பராமரிப்பு துறை, வேளாண்மை, பொறியியல் துறை, பட்டு வளர்ச்சி துறை ஆகிய துறைகளின் அலுவலர்கள் கலந்து கொண்டு திட்டங்களை எடுத்துக் கூறினர். வட்டார தொழில்நுட்ப மேலாளர் சந்திரசேகரன், அட்மா திட்டங்களை பற்றி எடுத்துக் கூறினார்.

விழாவிற்கான ஏற்பாடுகளை துணை வேளாண்மை அலுவலர், உதவி வேளாண்மை அலுவலர்கள், மற்றும் அட்மா திட்ட அலுவலர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். வேளாண்மை அலுவலர் பசுபதி நன்றியுரை கூறினார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

Rithvik Pipe

IS 4985 : 2021 CML-6400119610 · IS 9537 CML-6400121694

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW · isha · POWERGRID · BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# விண்ணை முட்டும் அரிசி விலை உயர்வு?




உலகளவில் அரிசி உற்பத்தியில் முன்னணியிலிருந்த சீனாவை தற்போது இந்தியா முறியடித்து உள்ளது. நமது நாட்டில் சுமார் 180 மில்லியன் மெ.டன் அரிசி சாகுபடி நடந்துள்ளது. அது மட்டுமல்ல 40% அரிசி வெளிநாடு களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இந்தியாவில் தமிழகம் தவிர ஆந்திரா, தெலுங்கானா, ஒடிசா, அரியானா, பஞ்சாப், மேற்கு வங்கம் உள்ளிட்ட மாநிலங்களில் நெல் விளைச்சல் அதிகமாக நடந்துள்ளது. இதில் தெலுங்கானா முதலிடத்தில் உள்ளது.

**தற்போதை எல்-நினோ பாதிப்பு**

எல்-நினோ பாதிப்பால், தென்மேற்கு பருவமழை பொய்த்து விட்டது. அதுவும் மேட்டூர் அணை திறக்கப்படாதால் குறுவை சாகுபடி பாதிக்கு பாதி குறைந்து விட்டது. கர்நாடகாவில் காவிரியில் தண்ணீர் இல்லாத காரணத்தால் அங்கும் நெல் சாகுபடி பாதிப்பு. அதுமட்டுமல்ல ஆந்திராவில் ஆலமட்டி, துங்கபுத்ரா அணைக்கட்டு பகுதியில் நெல் பயிரிட வேண்டாம் என அரசே நேரடியாக அறிவுறுத்தி உள்ளது. இதற்கு முழுக்க எல்-நினோ பாதிப்பு தான் என்பதில் மாற்று கருத்து இல்லை.

**அரிசி விலை உயர்வுக்கான காரணம்?**

தமிழகத்தில் 91 லட்சம் மெ.டன் அரிசி தேவை என்பதில் மாற்று கருத்து இல்லை. கடந்த ஆண்டை போல இந்த ஆண்டும் 75 லட்சம் டன் உற்பத்தி நடந்துள்ளது. ஆனால் அதில் பெருமளவில் மழையால் சேதமாவதாலும், தூயமல்லி, சீரக சம்பா, டீலக்ஸ் ஆர்என்ஆர் போன்ற சன்னரக நெல்லை மற்ற மாநிலங்களில் இருந்தே வாங்க வேண்டியிருப்பதால் விலை ஏற்றத்தை தடுக்க முடியவில்லை. 6 மாதங்களுக்கு முந்தைய விலையுடன் ஒப்பிடுகையில் சன்ன ரக புழுங்கல்

அரிசியின் விலை 20% அளவுக்கு உயர்ந்திருக்கிறது. தமிழகத்தில் 1800 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் உள்ளன. நெல்லை அரைத்து அரிசியாக்கிட சுமார் 3000 நவீன அரிசி ஆலைகள் உள்ளன. தமிழகத்தில் 26 கிலோ அரிசி சிப்பத்திற்கு சாரசரியாக 100-140 வரை விலை உயர்ந்துள்ளன. இது போக 25 கிலோ சிப்பத்திற்கு 5% G.S.T வரியும் செலுத்த வேண்டும்.

எரிபொருள் விலை உயர்வு நீடித்த போதும் கூட தமிழகத்தில் அரிசி விலையில் மாற்றம் ஏற்படவில்லை. அதே நேரத்தில வழக்கமாக ஆடி, ஆவணி மாதங்களில் அரிசி விலை சிறிது உயர்வது வழக்கமான ஒன்று தான் என அரிசி வியாபாரி களின் வாதமாக உள்ளது.

**அரசு என்ன செய்ய வேண்டும். விலை உயர்வை தடுக்க?**

1) நெல் கொள்முதல் விலை உயர்த்திட வேண்டும்.
2) உரம் விலை உயர்வை தடுக்க நடவடிக்கை.
3) நெல் சாகுபடி ஊக்குவிக்க குறுவை தொகுப்பு போல சம்பா தொகுப்பு வழங்க வேண்டும்.
4) அரிசி பதுக்கலை தடுக்க நடவடிக்கை.
5) மானாவாரி நெல் சாகுபடியை ஊக்குவித்தல்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# கத்தரிக்காயில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை (IPM) குறித்த செயல்விளக்க நிகழ்ச்சி நடைபெற்றது

தென்காசி, ஜூலை 31

தமிழ்நாட்டின் வாசுதேவநல்லூரில், விவசாயிகளிடையே அறிவியல் சார்ந்த, நிலைத்தன்மை கொண்ட மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த பூச்சி மேலாண்மை முறைகளை ஊக்குவிக்கும் நோக்கில் கத்தரிக்காயில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை (Integrated Pest Management - IPM) குறித்த செயல்விளக்க நிகழ்ச்சி நடைபெற்றது.



இந்நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, கலசலிங்கம் ஆராய்ச்சி மற்றும் கல்வி அகாடமியின் தோட்டக்கலை மாணவர்கள், கத்தரிக்காயில் தாக்கம் ஏற்படுத்தும் முக்கிய பூச்சிகள், அவற்றை அடையாளம் காணும் முறைகள், அறிகுறிகள், சேதத்தின் தன்மை மற்றும் அறிவியல் அடிப்படையிலான ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை தொழில்நுட்பங்கள் ஆகியவற்றை விளக்கும் தகவல் விளக்கப்படங்களைத் தயாரித்து காட்சிப்படுத்தினர்.

மேலும், முக்கிய பூச்சிகளை திறம்படக் கட்டுப்படுத்த பரிந்துரைக்கப்படும் பூச்சிக்கொல்லிகள் மற்றும் பூஞ்சைக் கொல்லிகள் காட்சிப்படுத்தப்பட்டு, அவற்றின் சரியான தேர்வு, பாதுகாப்பான பயன்பாடு மற்றும் பொறுப்பான முறையில் பயன்படுத்துவதன் அவசியம் குறித்து விவசாயிகளுக்கு அறிவியல் விளக்கங்கள் வழங்கப்பட்டன. நிலைத்த வேளாண்மைக்கு ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மையின் முக்கியத்துவமும் வலியுறுத்தப்பட்டது.

இந்த செயல்விளக்க நிகழ்ச்சி, அறிவியல் பூர்வமான பூச்சி மேலாண்மை தொழில்நுட்பங்களை விவசாயிகளிடம் கொண்டு சேர்க்கும் பயனுள்ள தளமாக அமைந்தது. மேலும், தேவையற்ற பூச்சிக்கொல்லி மருந்துகளின் பயன்பாட்டைக் குறைத்தல், பயனுள்ள உயிரினங்களைப் பாதுகாத்தல், மகசூலை அதிகரித்தல்

மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த கத்தரிக்காய் சாகுபடியை மேம்படுத்துதல் ஆகியவற்றின் அவசியம் குறித்து விவசாயி களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இந்த செயல்விளக்க நிகழ்ச்சியை, கலசலிங்கம் ஆராய்ச்சி மற்றும் கல்வி அகாடமியின் ஊரக தோட்டக்கலைப் பணி அனுபவ (RHWE) திட்டத்தின் ஒரு பகுதியாக, தோட்டக்கலை மாணவர்கள் எம்.அபர்ணா உன்னிதன், ரஸக்னா கே., கார்த்திகாஶ்ரீ எம்., மற்றும் அனிதா ஜி. ஆகியோர் இணைந்து ஏற்பாடு செய்து நடத்தினர்.



# மேம்படுத்தப்பட்ட நெல் சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்த விவசாயிகள் கலந்துரையாடல் மற்றும் வேளாண் இடுபொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி




திருவண்ணாமலை, ஜுலை 31

திருவண்ணாமலை மாவட்டம், வாழவச்சனுாரில் உள்ள அரசு வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் மற்றும் இந்திய நெல் ஆராய்ச்சி நிலையம், ஹைதராபாத் மற்றும் விவேகானந்தா அறக்கட்டளை இணைந்து நடத்தும் வேளாண் பெருமக்கள், விஞ்ஞானிகள் கலந்துரையாடும் மேம்படுத்தப்பட்ட நெல் சாகுபடி உயர் தொழில்நுட்பங்களுக்கான கலந்துரையாடல் நிகழ்வு வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவர் பல்நோக்கு அரங்கில் 29.07.26 அன்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வர் முனைவர் செ.மாணிக்கம், தலைமை தாங்கினார். விழாவிற்கு சிறப்பு விருந்தினராக இந்திய நெல் ஆராய்ச்சி நிலையத்தில் முதன்மை விஞ்ஞானி முனைவர் எம்.பி.பி. பிரசாத் பாபு கலந்து கொண்டு உயர் நெல் விளைச்சலுக்கான உயர் தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். மேலும் இந்திய நெல் ஆராய்ச்சி நிலையத்தின் திட்டங்கள் பற்றியும் காலநிலை மாற்றங்களுக்கான அவர்களுடைய ஆராய்ச்சியை பற்றியும் மிகவும் சிறப்பாக எடுத்துரைத்தார்.

மேலும் இந்த விழாவிற்கு சிறப்பு சேர்க்கும் விதமாக இந்திய நெல் ஆராய்ச்சி கழகத்தினுடைய பயிற்சி துறையின் மேனாள் தலைவர் முனைவர் பி. முத்துராமன், கலந்து கொண்டு திட்டத்தின் முக்கியத் துவம் பற்றி எடுத்துரைத்தார். திருவண்ணாமலை மாவட்டத்தில் அமைந்துள்ள விவேகானந்தர் அறக்கட்டளையின் நிறுவனத் தலைவர் முனைவர் பாலு, கலந்து கொண்டு விவசாயிகள் எப்படி விஞ்ஞானிகளுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு உயர் தொழில் நுட்பங்களின் மூலம் உற்பத்தியை பெருக்க வேண்டும் என்பதை பற்றி கலந்துரையாடினார். இந்நிகழ்வில் வேளாண் பெரு மக்களுக்கு வேளாண் இடுபொருட்கள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சிக்கு முதன்மை விஞ்ஞானி முனைவர் ச.பாபு, இணைப் பேராசிரியர் (உழவியல் துறை) முன்னிலை வகித்து சிறப்பித்தார். நிறைவாக இவ்விழாவிற்கு இந்த திட்டத்தின் முதன்மை விஞ்ஞானி முனைவர் த. தனசேகரன், உதவிப் பேராசிரியர் (தோட்டக்கலைத் துறை) நன்றி உரையாற்றினார். இந்த நிகழ்வில் சுமார் 80-க்கும் மேற்பட்ட திருவண்ணாமலை மாவட்ட விவசாயிகள் மற்றும் வேளாண் பெருமக்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

# பங்கேற்பு கிராமப்புற மதிப்பீடு நிகழ்வில் வேளாண் கல்லூரி மாணவர்கள்



தேனி, ஜூலை 31

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், ராயப்பன்பட்டி கிராமத்தில், கலசலிங்கம் பல்கலைக்கழக வேளாண் கல்லூரியின் இறுதியாண்டு மாணவர்கள், கிராமதங்கல் திட்டத்தின் ஒரு பகுதியாக கிராம விவசாயிகளுடன் இணைந்து பங்கேற்பு கிராமப்புற மதிப்பீடு (Participatory Rural Appraisal - PRA) நிகழ்ச்சியை வெற்றிகரமாக நடத்தினர்.

இந்நிகழ்ச்சியின் மூலம் கிராமத்தின் இயற்கை வளங்கள், வேளாண் நிலை, விவசாயிகளின் தேவைகள், சவால்கள் மற்றும் வளர்ச்சி வாய்ப்புகள் குறித்து விவசாயிகளின் நேரடி பங்களிப்புடன் தகவல்கள் சேகரிக்கப்பட்டன. மேலும், கிராம மக்களின் கருத்துகள் மற்றும் அனுபவங்களின் அடிப்படையில் எதிர்கால வேளாண் மேம்பாட்டிற்கான செயல்திட்டங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் கிராம விவசாயிகள், வேளாண் கல்லூரி மாணவர்கள் மற்றும் வேளாண்மைத் துறை அலுவலர்கள் ஆர்வமுடன் பங்கேற்று, கிராம வளர்ச்சி மற்றும் நிலையான வேளாண் முன்னேற்றத்திற்கான கருத்துகளைப் பகிர்ந்து கொண்டனர்.

# மக்காச்சோளத்தில் படைப்புழு மேலாண்மை பற்றிய வெளிவளாக பயிற்சி




கடலூர், ஜூலை 31

கடலூர் மாவட்டம், விருத்தாசலம், வேளாண்மை அறிவியல் நிலையம் சார்பாக மக்காச்சோளத்தில் படைப்புழு மேலாண்மை பற்றிய வெளிவளாக பயிற்சி 30.07.26 அன்று நல்லூர் வட்டாரம், பெரிய நெசலூர் கிராமத்தில் நடைப்பெற்றது.

இப்பயிற்சியில் மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் க.நடராஜன், வேளாண்மை அறிவியல் நிலையத்தின் முக்கிய குறிக்கோள்கள் மற்றும் அதிக மகசூல் தரும் உயர்தர இரகங்கள் பற்றியும், விதை உற்பத்தி செய்யும் முறைகள் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார். விவசாயிகளுக்கு மக்காச்சோளத்தில் படைப்புழு மேலாண்மை பற்றி தெளிவாக எடுத்துரைத்தார். மக்காச்சோள பயிருக்கு ஒவ்வொரு 10 வரிசைக்கும் 75 செ.மீ இடைவெளிவிட வேண்டும். இதனால் பூச்சிகொல்லி தெளிப்பதற்கு ஏதுவாக அமையும், மேலும் வரப்பு பயிராக கம்பு நேப்பியர் பயிர் செய்யவும், ஊடுபயிராக உளுந்து மற்றும் பச்சை பயிறு செய்யுமாறும் மற்றும் படைப்புழுக்களை கவர்ந்து இழுக்கும் இனகவர்ச்சி பொறி வைக்குமாறும் வலியுறுத்தினார். மேலும் ஒருங்கிணைந்த பயிர் பராமரிப்பு மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி, நோய் மேலாண்மை பற்றியும் விவசாயிகளுக்கு விளக்கமாகவும், செயல் முறையாகவும் காண்பிக்கப்பட்டது. நல்லூர் வட்டார உதவி வேளாண்மை அலுவலர்கள் மற்றும் தனுக்கா உர நிறுவனமும் இப்பயிற்சியில் கலந்துக் கொண்டனர்.

இறுதியாக விவசாயிகள், வேளாண் விஞ்ஞானிகளிடம் தனது ஐயங்களை கேட்டு தெளிவு பெற்றனர்.இப்பயிற்சியில் கடலூர் மாவட்ட நல்லூர் வட்டாரம், பெரிய நெசலூர் கிராமத்தில் உள்ள விவசாயிகள் 65-க்கும் மேற்பட்டோர் கலந்துக் கொண்டு பயன்பெற்றனர்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# அட்மா திட்டத்தின் கீழ் கிசான் மேளா விவசாயிகள் கருத்தரங்கம்



அரியலூர், ஜூலை 31

அரியலூர் மாவட்டம், தா.பழூர் வட்டாரம், வேளாண்மைத் துறையின் கீழ் செயல்பட்டு வரும் அட்மா திட்டத்தில் விவசாயிகளுக்கு கிசான் மேளா கருத்தரங்கம் இருகையூர் கோட்டியால் பு.சு திருமண மண்டபத்தில் நடைப்பெற்றது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக தலைமையேற்று கலந்து கொண்ட ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் வைத்திலிங்கம் பங்கேற்று பேசுகையில் விவசாயிகள் அனைவரும் வேளாண்மை துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் தொழில் நுட்பங்களை கடைப்பிடித்து விவசாயத்தில் முன்னேற வேண்டும் என கேட்டுக் கொண்டார். மேலும் நீர் மேலாண்மையின் முக்கியத்துவம் குறித்து விவசாயிகள் அனைவரும் தெரிந்து கொண்டு பின்பற்றுமாறு விவசாயிகளிடத்தில் கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் வேளாண்மை உதவி இயக்குநர் தமிழ்மணி, வரவேற்று பேசுகையில், அங்கக வேளாண்மையின் முக்கியத்துவம், வேளாண்மை துறையின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் விவசாயிகளின் நில உடமை பதிவேடு குறித்தும் எடுத்து கூறினார். கிரீடு வேளாண் அறிவியல் மையத்தின் தொழில்நுட்ப வல்லுநர் திருமலைவாசன் பேசுகையில், எல்நினோ பாதிப்பு குறித்தும் குறைந்த அளவு நீரைப் பயன்படுத்தி செயல்படுத்தப்படும் மாற்று பயிர் சாகுபடியினை இந்நேரத்தில் விவசாயிகள் கடைப்பிடிக்க வேண்டும் எனக் கூறினார்.

எண்ணெய் வித்துப் பயிர்களில் ஒருங்கிணைந்த உர நிர்வாகத்தை கடைப்பிடித்து குறைந்த செலவில் அதிக விளைச்சலை பெறும் வழிமுறைகள் குறித்தும் எடுத்துக்கூறினார். கிரீடு வேளாண் அறிவியல் மையத்தின் தொழில்நுட்ப வல்லுநர் ராஜ்கலா கலந்து கொண்டு விவசாயிகளிடத்தில் சிறப்புரை ஆற்றி பேசுகையில், அங்கக வேளாண்மையின் தொழில்நுட்பங்கள், எண்ணைய் வித்துப்பயிர்களில் விதை நேர்த்தி செய்வதின் அவசியம் குறித்தும் ஒருங்கிணைந்த முறையில் உர நிர்வாக முறையினை பின்பற்றி மண் வளம் மற்றும் உடல் நலத்தை பாதுகாக்கலாம் என விதைப்பு முதல் அறுவடை வரை உள்ள சாகுபடி தொழில்நுட்பங்களை விரிவாக எடுத்துகூறினார்.

நிகழ்ச்சியின் முடிவில் வேளாண் காடுகள் வளர்ப்பு திட்டத்தின் கீழ் மரக்கன்றுகளை, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் வைத்திலிங்கம், பயனாளிகளுக்கு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் துணை வேளாண்மை அலுவலர் ராஜதுரை, தோட்டகலை துணை அலுவலர் தட்சிணாமூர்த்தி, வேளாண்மை உதவி அலுவலர் சரத்குமார், தோட்டகலை உதவி அலுவலர் அரவிந்த் மற்றும் அட்மா திட்ட வட்டார தொழில் நுட்ப மேலாளர் சகாதேவன் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் லெட்சுமி உா மற்றும் தா.பழூர் வட்டார கிராம விவசாய பெருமக்கள் 100 க்கும் மேற்பட்டோர் கலந்துக்கொண்டனர்.

## அறுவடைக்குப்பின் மேலாண்மை குறித்த விவசாயிகள் பயிற்சி



சிவகங்கை, ஜுலை 31

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டாரம் லாடனேந்தல் கிராமத்தில் (31.07.26) அன்று வேளாண்மைத் துறையின் சார்பில் அட்மா விரிவாக் கசீரமைப்பு திட்டத்தின் கீழ் அறுவடைக்குப்பின் மேலாண்மை பற்றிய உள்மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சியில் திருப்புவனம் வேளாண்மை உதவி இயக்குநர் தா.மலர்விழி வரவேற்புரையாற்றி, பயிர் முழுமையாக முதிர்ந்த பின்னர் அறுவடை செய்யுமாறும், தாமதமான அறுவடை தரம் குறைவுக்கும், மகசூல் இழப்புக்கும் காரணமாகும். உகந்த வெப்பநிலை மற்றும் காற்றோட்டமுள்ள இடத்தில் சேமிக்க வேண்டும். தானிய ஈரப்பதம் 12-14% இருக்க வேண்டும் என்பது குறித்த தொழில்நுட்ப உரையாற்றினார். திருப்புவனம் தோட்டக் கலை உதவி இயக்குநர் சர்மிளா, காய்கறி பயிர்கள் அறுவடைக்குப் பின் சரியான முறையில் கையாள்வது, சுத்தம் செய்தல், உலர்த்துதல், தரப்படுத்துதல் மற்றும் தேர்வு செய்தல் குறித்த தொழில்நுட்பங்களை எடுத்துரைத்தார். வேளாண்மை அலுவலர் (ஓய்வு) குணசேகரன், சரியான அறுவடைபின் மேலாண்மை மூலம் உற்பத்தி இழப்பை குறைத்து, தரமான விளைபொருளை அதிக லாபத்துடன் சந்தைப்படுத்தலாம் என்பது பற்றிய தொழில் நுட்பங்களை விரிவாக எடுத்துரைத்தார். உதவி தோட்டக்கலை அலுவலர் கார்த்திக், துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து எடுத்துக் கூறினார். அட்மா திட்ட பணியாளர்கள் பயிற்சிக் கான ஏற்பாடுகளை செய்திருந்தனர். விவசாயிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர்.

# சான்று பெற்ற விதைகளை பயன்படுத்தி அதிக மகசூல் பெறலாம்!

விழுப்புரம், ஜூலை 31

விழுப்புரம் மாவட்டத்தில் ஆண்டு தோறும் சம்பா பருவத்தில் சராசரியாக 67,000 ஹெக்டர் நெல் பயிரிடப்படுகிறது. விவசாயிகள் விதை சான்றளிப்பு துறையினால் சான்றளிக்கப்பட்ட விதைகளை பயன்படுத்தி அதிக மகசூல் பெற விழுப்புரம் விதைச்சான்று உதவி இயக்குனர் பாபு விவசாயிகளை கேட்டுக் கொண்டுள்ளார்.

விவசாயிகள் ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து அவர்களே உற்பத்தி செய்யப்படும் நெல்லினை விதைகளாக பயன் படுத்துவதால் அவற்றின் வீரியம் குறைந்து விளைச்சல் வெகுவாக பாதிக்கப்படுகிறது. மேலும் சாகுபடி நேரத்தில் தரமில்லாத விதைகளையோ அல்லது நாற்றுகளையோ வெளியில் இருந்து வாங்கி பயன்படுத்தும் நிலை ஏற்படுகிறது. இதனால் உற்பத்தி செய்யப்படும் நெல் வீரியமின்றி மகசூல் இழப்பு ஏற்படுகிறது. இதனை தவிர்க்க தரமான சான்று பெற்ற விதைகளை பயன்படுத்தி மகசூலை பெருக்கலாம்.

சான்று பெற்ற விதைகள் குறைந்தபட்ச விதைத்தரங்களான புறத்தூய்மை, முளைப்புத்திறன், ஈரப்பதம், பிறரகக் கலவன் மற்றும் பூச்சி நோய் தாக்குதல் இல்லாமலும் தரமானதாக இருப்பதால் விதைத்தவுடன் நன்கு முளைத்து செழிப்பாகவும் சீராகவும் வளர்ந்து வீரியத்துடன் அதிக மகசூல் தருகிறது.

எதிர்வரும் சம்பா பருவத்திற்கு ஏற்ற இரங்களான CR1009 Sub-1, மேம்படுத்தப்பட்ட வெள்ளை பொன்னி, ADT - 54, TKM - 15, ASD-21, NLR - 34449, திருச்சி - 3, ADT-39, CR 1009, TKM-13 , BPT 5204 போன்ற இரகங்கள் விதை உற்பத்தி செய்யப்பட்டுசான்றுப் பணி முடித்து விவசாயிகளுக்கு வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்கள் மற்றும் தனியார் விதை உற்பத்தியாளர் மூலமாக வழங்கப்பட உள்ளது. இதனை விவசாயிகள் பெற்று பயனடையுமாறு கேட்டுக்கொள்கிறார்.

விதைச்சான்றளிப்பு துறையால் சான்றளிக்கப்படும் விதைகள் அனைத்து தர நிலைகளையும் பூர்த்தி செய்கின்றன. ஆதார நிலை விதைகளை பயன்படுத்தி விவசாயிகளின் வயல்களில் உற்பத்தி செய்யப்படும் விதைப்பண்ணைகள் பயிர் பூக்கும் பருவத்திற்கு முன்பாகவே விதைச்சான்றளிப்பு துறையில் பதிவு செய்யப்படுகிறது.

விதைச்சான்று அலுவலர்கள் பூக்கும் மற்றும் முதிர்ச்சி பருவங்களில் வயலாய்வு மேற்கொண்டு தர நிலைகளை ஆராய்ந்து வயல் தரங்களில் தேர்ச்சி பெற்ற விதைகளை மட்டுமே விதைகளாக கொள்முதல் செய்ய அனுமதிக்கப்படுகிறது. மேலும் அரசு அங்கீகாரம் பெற்ற விதைசுத்திகரிப்பு நிலையங்களில் விதைகள் சுத்திகரிக்கப்பட்டு பரிசோதனைக்கு மாதிரிகள் உட்படுத்தப்படுகிறது. பரிசோதனையில் தேர்ச்சி பெறும் விதைகளுக்கு மட்டும் சான்று அட்டைகள் பொருத்தப்பட்டு விற்பனைக்கு அனுமதிக்கப்படுகிறது. எனவே விழுப்புரம் மாவட்ட விவசாயிகள் சான்றுப் பெற்ற விதைகளை வாங்கி பயனடையுமாறு விழுப்புரம் மாவட்ட விதைச்சான்று உதவி இயக்குநர் பாபு கேட்டுக்கொள்கிறார்.




# துல்லிய வேளாண்மை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திய வேளாண் கல்லூரி மாணவிகள்



ஈரோடு, ஜுலை 31

ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டம் ஒரு பகுதியாக, வேளாண் கல்லூரி மாணவர்கள் முன்னோடி விவசாயி ராஜாவின் பண்ணைக்கு நேரில் சென்று, அவரது சாகுபடி முறைகள் மற்றும் வேளாண் அனுபவங்களை அறிந்து கொண்டு பயிர் சாகுபடி, கால்நடை வளர்ப்பு மற்றும் விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து மாணவர்கள் கலந்துரையாடி, அவற்றை பதிவு செய்தனர்.

மேலும், மாணவர்கள் துல்லிய வேளாண்மை குறித்து விவசாயிக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர். சொட்டு நீர்ப்பாசனம், மண் பரிசோதனை, ஜிபிஎஸ் தொழில்நுட்பம், சென்சார்கள் மற்றும் தரவுகளின் அடிப்படையிலான ஊட்டச்சத்து மேலாண்மை போன்ற நவீன தொழில்நுட்பங்கள் பண்ணை நிர்வாகத்தை எவ்வாறு மேம்படுத்துகின்றன என்பதை விளக்கி துல்லிய வேளாண்மை மூலம் நீர், உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளை சிக்கனமாக பயன்படுத்த முடியும், உற்பத்திச் செலவு குறையும், மகசூல் அதிகரிக்கும், மண்ணின் வளம் பாதுகாக்கப்படும், சுற்றுச்சூழல் மாசுபாடு குறையும் மற்றும் வளங்களை திறமையாக பயன் படுத்துவதன் மூலம் விவசாயிகளின் வருமானம் அதிகரிக்கும் என்பதை எடுத்து கூறினர்.

மாணவர்கள் பகிர்ந்த நவீன வேளாண் தொழில்நுட்பங்களை ராஜா பாராட்டியதுடன், தனது பண்ணையில் துல்லிய வேளாண் மையை நடைமுறைப்படுத்துவதன் நன்மைகள் குறித்து ஆர்வத் துடன் கலந்துரையாடினார். இந்த களப்பயணம், மாணவர்கள் மற்றும் விவசாயிகளுக்கு இடையிலான அறிவுப் பரிமாற்றத்தை மேம்படுத்தி, நிலையான மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த வேளாண்மையை ஊக்குவிக்கும் சிறந்த வாய்ப்பாக அமைந்தது.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# பழங்கள் மற்றும் காய்கறிகளின் முதல்நிலை பதப்படுத்துதல் குறித்த இரண்டு நாள் திறன் மேம்பாட்டு பயிற்சி

காரைக்குடி, ஜூலை 31

செட்டிநாடு மானாவாரி வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில், தமிழ்நாடு உணவு பதப்படுத்துதல் மற்றும் வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டு கழகத்தின்' பழங்கள் மற்றும் காய்கறிகளின் முதல் நிலைபதப்படுத்துதல் சேமிப்பு மற்றும் சிப்பமிடுதல்' குறித்த இரண்டு நாள் திறன் மேம்பாட்டு பயிற்சி, கோயம்புத்தூர், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள உணவுபதன்செய் பொறியியல் துறையின் சார்பாக 29.07.26 மற்றும் 30.07.26 ஆகிய தினங்களில் நடைபெற்றது.

செட்டிநாடு மானாவாரி வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் மற்றும் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதன்மை அலுவலர் முனைவர் இரா.பாபு, தலைமை ஏற்று சிறப்புரையாற்றித் தொடங்கி வைத்தார். உணவுபதன்செய் பொறியியல் துறையின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் மு.பாலகிருஷ்ணன் இந்தப் பயிற்சிக்கான ஏற்பாடுகளை செய்து மற்றும் அதற்கான முழு ஒத்துழைப்பையும் வழங்கினார்.

உணவுபதன்செய் பொறியியல் துறையின் பேராசிரியர் முனைவர் அ.ராமலட்சுமி, பயிற்சி பற்றிய முழு விபரங்களையும், உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிலைகள் பற்றியும் விளக்கினார். உணவு அறிவியல் மற்றும் ஊட்டச்சத்து துறையின் இணை பேராசிரியர் முனைவர் சோ.கமலசுந்தரி, பழங்கள் மற்றும் காய்கறிகளின் இரண்டாம் நிலை பதப்படுத்துதல் மற்றும் பிழிதல் தொழில் நுட்பங்களை பற்றி எடுத்துரைத்தார். உணவுபதசெய் பொறியியல் துறையின் உதவி பேராசிரியர்கள் முனைவர் கோ.அமுதசெல்வி மற்றும் ச.பர்வீன், பழங்கள் மற்றும் காய்கறிகளை சிப்பம் இடுதல் தொழில்நுட்பங்களை பற்றியும், பதப்படுத்துதலுக்கு தேவையான நவீன இயந்திரங்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் குறித்தும் பேசினார்கள். அ.கீர்த்திவாசன் (TNAPEx) வேளாண் ஏற்றுமதியில் உள்ள வாய்ப்புகள், அதன் வரம்பு மற்றும் ஏற்றுமதி நடைமுறைகள் பற்றி எடுத்துரைத்தார். K.ராஜா, R.அருண்குமார் மற்றும் K.குருசாமி ஆகிய பேராசிரியர்கள் தொழில்நுட்ப உரையாற்றினார்கள். பயிற்சியில் விவசாயிகள், தொடக்கத் தொழில்முனைவோர் மற்றும் விவசாய உற்பத்தியாளர் அமைப்பை சேர்ந்த 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயனடைந்தனர். இவர்களுக்கு சான்றிதழ் மற்றும் கையேடு வழங்கப்பட்டது.

# பருத்தியில் களை மேலாண்மை

சேலம், ஜூலை 31

சேலம் மாவட்டம், வீரபாண்டி வட்டாரம், இனாம் பைரோஜி கிராமத்தில் பருத்தியில் வயல் சூழல் ஆய்வு குறித்த பண்ணைப்பள்ளி பயிற்சி வகுப்பு நடைபெற்றது.



25 விவசாயிகள் 5 குழுக்களாக பிரிந்து முன்நிலை செயல் விளக்கம் அமைக்கப்பட்ட பருத்தி பயிரின் நிலை, கோரை, அருகம்புல், சீமை தண்டு கீரை, சாரணை, அமராந்த்ஸ், முக்குரட்டை ஆகிய களைகளை கண்டறிந்த பிறகு களைகளை சேகரம் செய்து கலர் வண்ண அட்டையில் களைகளின் மாதிரி படங்களை வரைந்து களைகளின் பெயர் வாரியாக எண்ணிக்கை கணக்கிப்பட்டது.

ஒவ்வொரு குழுக்களிலும் களைகளின் எண்ணிக்கை ஏற்ப ஒரு கை களை எடுக்க வேண்டும் என்று முடிவு எட்டப்பட்டது. இதைத் தொடர்ந்து பருத்தியில் நுனி கிள்ளுதல், இரண்டு சதம் டி.ஏ.பி கரைசல் தெளித்தல் மற்றும் நுண்ணூட்டச்சத்து குறைபாடு குறித்தும் எடுத்து கூறப்பட்டது.

மேலும் பிரதம மந்திரி பயிர் காப்பீடு திட்டத்தில் சோளம், நிலக்கடலை பயிருக்கு காப்பீடு மேற்கொள்ள விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

உதவி விதை அலுவலர் கே.ஆர்.தங்கராஜ், வட்டார தொழில் நுட்ப மேலாளர் கே.ராஜேந்திரன், உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சி.சரஸ்வதி மற்றும் தீபன் முத்துசாமி ஆகியோர் உடன் இருந்தனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர்,
  ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக
  பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள்
  கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**